# சுபீட்சம்

SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

வியாழக்கிழமை 13.05.2021 supeedsam.com supeedsam@gmail.com







# கொரோனாவின் மோசமான நிலையை 2 வாரங்களில் அறிய முடியும்

## பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

(ராஜ்)

கொரோனா பாதிப்பின் தாக்கத்ம் அடுத்துவரும் இரண்டு வாரங்களில் உச்சத்தை எட்டும் என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும், பிசிஆர் சோதனையின் போது மிக அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளமை தெரிய வரலாம் எனவும் அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், மாகாணங்களிற்கு இடையிலான போக்குவரத்து கட்டுப்பாடுகள்

02 ஆம் பக்கத்தில்...

# கிழக்கு ஆளுநருக்கு கொரோனா



(பொன்ஆனந்தம்)

கிழக்கு மாகாண ஆளுநர் திருமதி அனுராதா யஹம்பத் கொவிட் 19 நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகம் உறுதிப்படுத்தியுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

# வவுணதீவு போலிஸ் நிலையத்தில் 12 போலிஸாருக்கு கோரோனா

## பொலிஸ் நிலையம் பூட்டப்பட்டது



(மட்டுநிருபர்)

மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 37 பொலிஸாருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 12 பொலிஸாருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதியானதையடுத்து பொலிஸ் நிலையம் மூடப்பட்டுள்ளது.

இங்கு கடமையாற்றும் ஏனைய

02 ஆம் பக்கத்தில்...

# கோரோனா கர்ப்பிணிக்கு பிரசவம் பார்த்த கிண்ணியா வைத்தியசாலை

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை கிண்ணியா தள வைத்தியசாலையில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட கற்பிணிக்கு மனிதாபிமான முறையில் பிரசவம் செய்த சம்பவமொன்று கிண்ணியா தள வைத்தியசாலையில் இடம் பெற்றுள்ளது.

கிண்ணியா பிரதேசத்தில் 27 வயதுடைய கர்ப்பிணிப் பெண்ணொருவர் பிரசவ வலி காரணமாக

02 ஆம் பக்கத்தில்...

# குருக்கள் மடத்தில் கோர விபத்து

## ஒருவர் பலி; மற்றுமோருவர் பலத்த காயம்



(ரக்ஸனா)

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருக்கள் மடம் தேவாலயத்திற்கு முன்னால் நேற்று புதன்கிழமை மாலை இடம்பெற்ற பாரிய விபத்துச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் ஒருவர் பலத்த காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சிகுடி பொலிசார் தெரிவித்தனர்.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது;

02 ஆம் பக்கத்தில்...


MULTI CONSULTING
Versicherung & Finanz
சமூக அக்கறை எமது இலக்கு
குறைந்த கட்டணத்தில் வீட்டுக்காப்புறுதி
உங்களின் அனைத்துக் காப்புறுதிகளுக்கும் ஓர் நம்பிக்கையான நிறுவனம்
Im Rietpark 5 ,8180 Bülach, Zürich, Switzerland
info@multiconsulting.ch
079 765 50 57 www.multiconsulting.ch


# நோன்புப் பெருநாள் நாளை

புனித ஷவ்வால் மாதத்திற்கான தலைப் பிறை தென்படாமையினால் நாளை வெள்ளிக்கிழமை 14 ஆம் திகதி நோன்புப் பெருநாளை கொண்டாடுமாறு அகில இலங்கை ஜம்இய்யதுல் உமா சபை அறிவித்துள்ளது.

ஷவ்வால் மாதத்திற்கான தலைப் பிறை பார்க்கும் மாநாடு நேற்று புதன்கிழமை மாலை கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இடம் பெற்றது.இதன்போதே குறித்த தீர்மானம் ஏகமனதாக மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பயணக் கட்டுப்பாடு அறிவிப்பு:

# வெளியில் செல்ல அடையாள அட்டை இறுதி இலக்க முறைமை அமுல்படுத்தப்பட்டது

நாடு தழுவிய முழு நேர பயணக் கட்டுப்பாடு இன்று இரவு 11 மணி முதல் எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 4 மணி வரையில் நாடு தழுவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படாத பகுதிகளில் வசிப்பவர்கள் தமது தேசிய அடையாள அட்டையின் கடைசி

02 ஆம் பக்கத்தில்...

## கோரோனாவுக்கு திருமலையில்

# 22 பேர் பலி

(பொன்ஆனந்தம்)

திருகோணமலை மாவட்டத்தில் கொரோனா தொற்றின் காரணமாக 22 பேர் புதன்கிழமை 10.00 மணிவரை இறந்துள்ளதுடன்

02 ஆம் பக்கத்தில்...


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


# 'கறுப்புக்கோடி விவகாரம் முஷாரப் எம்.பி.யின் முடிவு'




(ஏ.எல்.எம் சலீம், நூருல் ஹுதா உமர்)

தலைவர் றிஸாத்தின் கைதை கண்டித்து பெருநாள் தினத்தன்று கறுப்புக் கொடி பறக்கவிடுங்கள் எனும் கோரிக்கையானது அகில இலங்கை மக்கள் காங்கிரசின் கோரிக்கையல்ல. அது பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் அவர்களின் தனிப்பட்ட நிலைப்பாடே.

02 ஆம் பக்கத்தில்...


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
STRAVEL
Flugtickets | Hotels | Reiseversichenungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59



"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"
aaDaa Finance 0798000100
Aadaa Finance GmbH
Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO
Eidgenössische Finanzmarktaufsicht Nr.35302
Fachmann für versicherung & vorsorge
Hauptstrasse 54
6015 Luzern
Switzerland
079 8000 100
arulnages@yahoo.com
finma 34598
25605: cicero

## 'கறுப்புக்கொடி விவகாரம் முாரப் எம்.பி.யின் முடிவு'

அண்மையில் அவர் பொத்துவிலில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கட்சியின் அரசியல் உயர்பீடத்தில் நடக்காத பல செய்திகளை நடந்ததாக கூறினார். அவரின் நடவடிக்கைகளினால் மிகப்பெரும் வேதனையுடன் மக்கள் காங்கிரசின் பிரமுகர்களும், ஆதரவாளர்களும் இருக்கிறார்கள் என நிந்தவூரில் அம்பாறை மாவட்ட செயற்குழு நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட மக்கள் காங்கிரசின் உயர்பீட உறுப்பினர்களான கே.எம்.ஏ. ரஸாக், அஸ்ரப் தாஹீர், எம்.ஏ.அன்ஸில் ஆகியோர் தெரிவித்தனர்.

கடந்த காலங்களில் மன்னராட்சியிலும் சரி, சுதந்திரத்திற்கு பின்னரான அரசாங்கங்களிலும் சரி முஸ்லிங்கள் நம்பிக்கைக்குரியவர்களாக இருந்தார்கள். ஆனால் இப்போது சிலரின் நடவடிக்கைகளினால் அந்த நிலையில் மாற்றம் உள்ளதாகவே தெரிகிறது.

கடந்த 04 ஆம் திகதியன்று நடைபெற்ற உயர்பீட கூட்டத்தில் சட்டரீதியாக பிரச்சினைகளை அணுகவேண்டி கட்சியின் சிரேஷ்ட பிரதித்தலைவரை பதில் தலைவராக தற்காலியமாக நியமித்து அதிகாரங்களை வழங்கினோம். இதில் வேறு எவ்வித உள்நோக்கங்களுமில்லை. அகில இலங்கை மக்கள் காங்கிரசுக்கு அதிகமாக வாக்களித்த மக்கள் அம்பாறை மாவட்ட மக்களே. இங்கு கட்சிக்கென்று நிர்வாக கட்டமைப்பு இருக்கிறது. மாவட்ட செயற்குழுவுடன் இணைந்து பணியாற்றாமல், அந்த செயற்குழுவுடன் கலந்துரையாடாமல் தனது விருப்பத்தின் பிரகாரம் பொறுத்துவாய்ந்த ஒருவர் அறிவிப்புக்களை விடுவது நல்லதல்ல.

கலந்தாலோசனைகள், தலைமைத்துவ வழிகாட்டல்களை பின்பற்றாமல் எந்த வித போராட்டங்களும் வென்றதாக வரலாறுகள் இல்லை. தலைவரை விடுவிக்க போராட்டம் நடத்தப்பட வேண்டும் என்பதில் எங்களுக்கு மாற்றுக்கருத்தில்லை. ஆனால் பெருநாளை இப்படி எதிர்ப்பு நாளாக மாற்றுவது முறையல்ல. அண்மையில் கூட ஒரு கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப்பும், அவரது ஆதரவாளர்களும் பதாதைகளை தூக்கிக்கொண்டு போராடுவது நல்லமல்ல என்றார்கள். மறுநாள் அவர்களே முஷாரப் எம்.பியின் தலைமையில் போராட்டம் நடப்பதாக அறிவித்தார்கள். இப்படி பல சம்பவங்கள் உள்ளது.

ஹரீன் எம்.பி சகல பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்யும் வரை கருப்பு சால்வை அணியப்போவதாக அறிவித்தது போன்று எங்கள் எம்.பியும் தலைவரின் விடுதலையை வலியுறுத்தி கருப்பு சட்டை அணிந்து பாராளுமன்றம் செல்ல வேண்டும். இதுவரை உள்ளுராட்சி மன்ற உறுப்பினர்கள் காட்டிய எதிர்ப்பு அளவுக்கும் அவர் பாராளுமன்றத்தில் எதிர்ப்பு காட்டவில்லை. கருப்பு கொடி கட்டும் விவகாரமாக ஊர் பிரமுகர்களிடத்திலோ, உள்ளுராட்சி மன்றங்களின் உறுப்பினர்களுக்கோ அவர் இதுவரை உத்தியோக பூர்வமாக அறிவிக்கவில்லை. கட்சியின் வரம்பை மீறி போர்ட் சிட்டிக்கு வாக்களித்தால் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுப்போம் என்றனர்.

## கிழக்கு ஆளுநருக்கு கொரோனா

நேற்று நடத்தப்பட்ட பி.சி.ஆர் சோதனையில் இது உறுதி செய்யப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் கோவிட் நோயாளிகளுக்கு சிகிச்சை மையங்கள் மற்றும் தடுப்பு மையங்களைத் தொடங்க கிழக்கு மாகாண ஆளுநர் மாகாணத்திற்குச் சென்று இரவு பகலாக ஈடுபட்டார்.

கொவிட் தொற்றுநோயிலிருந்து நம் நாட்டை கடைசி நேரத்தில் காப்பாற்றும் நோக்கத்துடன் திருகோணமலை, திரியயா கிரிஹாதுசயா அருகே ஏற்பாடு செய்யப்பட்ட ரத்தனா சூத்திரம். சஜ்ஜயானத்தை ஏற்பாடு செய்து அதில் கலந்து கொண்டார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொரோனா கர்ப்பிணிக்கு பிரசவம் பார்த்த கிண்ணியா

நேற்று கிண்ணியா தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவருக்கு உடனடியாக அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் அப்பெண்ணுக்கு கோவிட்19 தொற்று உறுதிப்படுத்தப் பட்டிருந்த நிலையில் கிண்ணியா வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஏ .எம். எம்.ஜிப்ரி அவர்களின் வழிகாட்டலுடன் மகப்பேற்று விஷேட வைத்திய நிபுணர் டொக்டர் புன்சிரி குணதிலக்கவினால் பிரசவம் நடாத்தப்பட்டது.

கொவிட் தொற்று கர்ப்பிணிகள் கிண்ணியா தள வைத்தியசாலையில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்டது முதல் தடவை எனவும், கொரோனா ஆபத்திலும் மனிதாபிமான முறையில் செயற்பட்ட தாதிய உத்தியோகத்தர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள் மற்றும் வைத்திய குழுவினருக்கு பாராட்டுக்களையும் நன்றிகளையும் பொதுமக்களும், உறவினர்களும் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை கோவிட் தொற்றுக்குள்ளான தாய் நலத்துடன் இருப்பதாகவும், கைக்குழந்தைக்கு ஓரிரு நாட்களில் அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் கிண்ணியா தள வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் குறிப்பிட்டார்.










## வவுணதீவு பொலிஸ் நிலையத்தில் 12 பொலிசாருக்கு கொரோனா

25 பொலிஸ் உத்தியோகத்தர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாள் வைத்தியர் நா. மயூரன்.தெரிவித்தார்.

விரைவில் குறித்த பொலிஸ் நிலையம் தொற்று நீக்கப்பட்டு புதிய பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் திறக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனாவின் 3 ஆவது அலையில் மொத்தமாக 335 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.இவர்களில் 7 பேர் மரணமடைந்துள்ளார்.218 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.95 பேர் குணமடைந்து வீடுகளுக்கு சென்றுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வவுணதீவு பொதுமக்கள் தமது பொலிஸ் சேவையை தற்காலிகமாக ஆயித்தியமலை பொலிஸ் நிலையத்தில் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வவுணதீவு பொலிஸ் நிலையத்திற்கு கிருமிநாசினிகளை தெளித்து சுத்தப்படுத்திய பின்னர் பொலிஸ் நிலையத்தை திறப்பதற்கான முழு நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## கொரோனாவுக்கு திருமலையில் 22 பேர் பலி

தொற்றுநிலமை தொடரும் போக்கையே காட்டுவதாக திருகோணமலை பிராந்திய சுகாதார பணிப்பாளர் பணிமனையின் புள்ளிவிபர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதன்கிழமை காலை 10 மணியுடன் முடிந்த 24 மாணித்தியாலங்களில் 36 பேர் மாவட்டத்தில் தொற்றாளர்கள் இனம் காணப்பட்டதாக அப்புள்ளிவிபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.கடந்த சில தினங்களாக வெளியான தகவலுடன் ஒப்பிடுகையில் புள்ளி விபரங்களின்படி தொற்றாளர்களின் எண்ணிக்கை யில் வீழ்ச்சி காணப்பட்டாலும் இறப்பு தொடர்கிறது.

இதன்படி திருகோணமலை பொதுச்சுகாதார வைத்தியஅதிகாரி பிரிவில் தொடர்ந்து தொற்றாளர்கள் இனம்காணப்பட்டதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. புதன்கிழமை காலை 10.00 மணியுடன் முடிந்த 24 மணித்தியாலத்தில் 12பேர் இப்பிரிவில் இனம்காணப்பட்டுள்ளனர்.

மூதூர் பொது ச்சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 11பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.

உப்புவெளிப்பிரிவில் 5பேரும் குச்சவெளிப்பிரிவில் 2பேரும் ,பதவிசிறிபுர, பிரிவில் 4பேரும் இனம்காணப்பட்டுள்ளனர்.

கோமரங்கடவல, கந்தளாய் பிரிவுகளில் தலா ஒருவர்வீதமும் இனம்காணப்பட்டிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது இதன்படி மாவட்டத்தில் 36பெர் தொற்றாளர்களாக இனம்காணப்பட்டு ள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது

ஆனாலும் கடந்த ஏப்பிரல் மாதத்தில் 693 பேர் இனம்காணப்பட்டிருந்தனர். ஒப்பிடுகையில் இந்நிலமை அதிகரிக்கலாம் என குறப்படுகின்றது. மேமாதத்தில் 12 நாட்களில் 556பேர் பதிவாகியுள்ளமையும் கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது.

இதன்படி நேற்றுக்காலைவரை திருகோணமலை மாவட்டத்தில் 1997 கொரோனா தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்.

22பேர் இறந்துள்ளனர். திருகோணமலை நகரத்தில் 7பேரும் உப்புவெளிப்பிரிவில் 7பேரும் கிண்ணியா வில் 3பேரும் மூதூர் பிரிவில் 2பேரும் கந்தளாய் 2பேரும் குறிஞ்சாங்கேணி ஒருவரும் என 22பேர் இறந்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

இதனால் பொது மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகின்றனர்.அருகில் உள்ள அல்லது தொடர்பில் உள்ளவர்களுக்கு தொற்று ஏற்பட்டால் நீங்களும் சுய தனிமைப்படுத்தி பாதுகாப்பு நடமுறைகளை பின்பற்றுங்கள் என வைத்திய அதிகாரி கள் வலியுறுத்தி வருகின்றனர்.

## பயணக் கட்டுப்பாடு அறிவிப்பு: வெளியில் செல்ல அடையாள அட்டை இறுதி

எண்ணின் அடிப்படையில் அத்தியாவசிய தேவைகளுக்காக வீடுகளை விட்டு வெளியேற அனுமதிக்கப்படுவார்கள் என பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இந்நிலையில், நாடளாவிய ரீதியில் பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் தனிமைப்படுத்தப்படாத பகுதிகளில் உள்ளவர்கள் தமது தேசிய அடையாள அட்டையின் கடைசி எண்ணின் அடிப்படையில் பொது இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவதுடன், இந்த நடைமுறை இன்று வியாழக்கிழமை முதல் மே 31 வரை நடைமுறையில் இருக்கும் என பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண மேலும் தெரிவித்தார்.

இதன்படி, தேசிய அடையாள அட்டையின் இறுதி இலக்கம் 0, 2, 4, 6, 8 ஆகிய இரட்டை எண்களைக் கொண்டவர்கள் 14, 16, 18, 20, 22, 24, 26, 28, 30 ஆகிய தினங்களில் பயணக் கட்டுப்பாடு இல்லாத சந்தர்ப்பத்தில் மட்டும் வீட்டை விட்டு வெளியேற அனுமதிக்கப்படுவார்கள்.

அதேபோன்று, தேசிய அடையாள அட்டையின் இறுதி இலக்கம் 1, 3, 5, 7, 9 ஆகிய ஒற்றை எண்களைக் கொண்டவர்கள் 13, 17, 19, 21, 23, 25, 27, 29, 31 ஆகிய தினங்களில் பயணக் கட்டுப்பாடு இல்லாத சந்தர்ப்பத்தில் மட்டும் வீட்டை விட்டு வெளியேற அனுமதிக்கப்படுவார்கள்.

பொது மக்கள் வீட்டைவிட்டு வெளியேறும் எல்லா சந்தர்ப்பங்களிலும் தமது தேசிய அடையாள அட்டையை உடன் வைத்திருக்க வேண்டும் என பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண வலியுறுத்தினார்.

தேசிய அடையாள அட்டை இல்லாத சந்தர்ப்பத்தில் மட்டுமே, அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஏனைய ஆவணங்களை எடுத்துச் செல்லுமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

எனினும், இந்த அடையாள அட்டை முறைமையிலிருந்து அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் கடமைகளுக்காகச் செல்பவர்களுக்கு விலக்களிக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

அத்தியாவசிய தேவைகளின் நிமித்தம் வீட்டைவிட்டு வெளியேறுபவர்கள் கண்டிப்பாக இதனைக் கருத்தில்கொண்டு செயற்படுமாறு பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித் ரோஹண மேலும் தெரிவித்தார்.

## குருக்கள் மடத்தில் கோர விபத்து ஒருவர் பலி; மற்றுமொருவர் பலத்த காயம்

களுவாஞ்சிகுடி பகுதியிலிருந்து சென்ற பேருந்தும், அதே திசையில் பயணித்த முச்சக்கரவண்டியும் ஒன்றை ஒன்று முந்திச் செல்ல முற்படுகையில் இவ்விபத்து சம்பவித்துள்ளதாக இதனை நேரில் அவதானித்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பவ இடத்திற்கு உடன் விஜயம் செய்த களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உப்புல் குணவர்த்தன தலைமையிலான பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவத்தில் முச்சக்கர வண்டி முற்றாக பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதுடன் அதில் பயணித்த சாரதி உட்பட்ட மூவரும் பயணித்துள்ளனர் அதில் சாரதி மரணமடைந்துள்ளதுடன் அதில் பயணித்த ஒருபெண் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாவைலக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் முச்சக்கர வண்டியில் பயணித்த மற்றய பெண் எதவித காயங்களுமின்றி தெய்வதாீனமாக உயிர் பிழைத்துள்ளார் என களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலை வட்டாரம் தெரிவிக்கின்றது.

உயிரிழந்தவர் 49 வயதுடைய கல்லாறு கிராமத்தைச் சேர்ந்த மணிராஜா என அடையாளம் காணப்பட்டுள்ளார். சடலம் தற்போது களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## கொரோனாவின் மோசமான நிலையை 2 வாரங்களில் அறிய முடியும்

போதுமானதாக இல்லை என தெரிவித்துள்ள பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம், மேலும் கடுமையாக கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

இதனிடையே, கொரோனா வைரஸின் மூன்றாவது அலை ஒரு முக்கியமான கட்டத்தை எட்டியுள்ளது எனவும், கண்டறியப்படாத நிலையில் சமூகத்தில் அதிக எண்ணிக்கையிலான நோய் தொற்றுடையவர்கள் இருக்க வாய்ப்புள்ளதாகவும் பொது சுகாதார பரிசோதகர்கள் எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் மகேந்திர பாலசூரிய கருத்து தெரிவிக்கையில்,

அடுத்த இரண்டு வாரங்களில் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை உச்சத்தை அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாளாந்தம் பெருமளவானவர்கள் பாதிக்கப்படுகின்றனர் .

கொழும்பு உட்பட மேற்கு மாகாணம் இன்னும் அதிக ஆபத்துள்ள பகுதி என்றும் சமூகத்தில் பாதிக்கப்பட்டவர்களை கண்டறிய கூடுதல் பி.சி.ஆர் பரிசோதனை செய்யப்பட வேண்டும் என்றும் கூறினார்.

இதேவேளை, நாட்டில் மூன்றாவது அலை இருக்காது என்று கூறி சுகாதார அதிகாரிகள் பொதுமக்களை தவறாக வழிநடத்தியதாகவும் தற்போது கொழும்பின் நிலைமை அச்சுறுத்தலாக உள்ளதாகவும் அவர் கூறினார்.

மாகாணங்களிற்கு இடையிலான போக்குவரத்து கட்டுப்பாடுகளை அறிவித்துள்ள அதிகாரிகள் மேலும் இறுக்கமான நடைமுறைகளை அறிவிக்காதது குறித்து கண்டனம் வெளியிட்டுள்ள அவர், மாகாணங்களிற்கு இடையிலான போக்குவரத்து கட்டுப்பாடுகள் மாத்திரம் போதுமானவையல்ல எனவும் தெரிவித்துள்ளார்.

SwissLife Select

சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள். உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்க கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு கரங் கோர்க்கும் ஒரே ஒரு நிறுவனம்...

மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி



Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch | Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65

உதயகுமார் கல்வி நிலையம்

UTHAYAKUMAR EDUCATION CENTER
உதயகுமார் கல்வி மையம்
வளர்ச்சியின் உச்ச நிலை கல்வி

முனைக்காடு மேற்கு, கொக்கட்டிச்சோலை

தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+0966502126923

n.uthayakumar1981@gmail.com

SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28

வீட்டுக்கடன் 0.62% தொடக்கம்
10% இல் சொந்த வீடு கட்ட அல்லது வாங்க

- இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
- வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
- வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
- Architect வேலைகள்

இலங்கையில் வீடுகள், காணிகள், விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து கொண்டே செய்யலாம்.

» கிறங்கன்காசே » பயணக்காப்புறுதி
» ஆயுட்காப்புறுதி » சட்டக் காப்புறுதி

SRI JEWELLERY



Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்

பரம்பரை பரம்பரையாக நகைத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்

வைர தாலி கொடி, மோதிரம், வளையல் பெயர் பெண்டன், மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.

திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து தரப்படும்.

+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை
பள்ளித் தலமனைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM

S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com

Mathe மகேந்திரா -வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

Aaran Ayurveda
& Wellness Massage



Weinberg Strasse - 22, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | 077 982 1291 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

# ஏறாவூரில் கடுமையான சட்ட நடவடிக்கை



(எம்.ரீ.எம்.பாரிஸ்)

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மட்டக்களப்பு ஏறாவூர் பிரதேச மக்களை பாதுகாக்கும் நோக்குடன் பல்வேறு மக்கள் நல வேலைத் திட்டங்களை ஏறாவூர் பிரதேச செயலகம், நகர சபை, சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், பொலிஸார் என்பன கூட்டிணைந்து முன்னெடுத்துள்ளன.

இதற்கமைவாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பிரதேசத்தின் முக்கிய அதிகாரிகள் மற்றும் பிரதிநிதிகளுக்கிடையிலான கொரோனா வைரஸ் தடுப்புச் செயலணியின் உயர் மட்ட கூட்டம் ஏறாவூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

இதன் போது சுகாதார அமைச்சின் வழிகாட்டலுக்கு அமைவாக கொரோனா வைரஸ் பரவலை தடுப்பதற்கு ஏதுவான சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவதற்கு பொது மக்களை விழிப்பூட்டுவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

ஏறாவூர் நகர சபையின் தவிசாளர் எம்.எஸ்.நழீம் பிரதேச செயலாளர் நிஹாரா மௌஜுத், சுகாதார வைத்திய அதிகாரி சாபீரா வசீம் ஆகியோர் தலைமையில் ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட சிவில் சமூக நல அமைப்புக்களின் பிரதிநிதிகளின் பங்குபற்றுதலுடன் இடம் பெற்ற இக் கூட்டத்தின் போது பொதுமக்களின் நன்மை கருதி சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை மிகவும் இறுக்கமாக நடைமுறைப்படுத்துவதற்கான பல்வேறு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் இதனை மீறுவோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

# இந்தியாவில் நடந்தேறும் கொரோனா தாக்கத்தை அயலில் இருக்கும் மன்னார் மக்கள் உணர வேண்டும்

## அரச அதிபர் திருமதி ஸ்ரான்லி டீமெல்

(வாஸ் கூஞ்ஞ)



மன்னார் மாவட்டத்துக்கு அயல் நாடானா இந்தியாவில் தற்பொழுது நிகழும் கொரோனா தாக்கங்களை மன்னார் மாவட்ட மக்கள் ஒவ்வொருவரும் உணர்ந்தவர்களாக இவ்வாறான சம்பவங்கள் எமது மாவட்டத்திலும் நாட்டிலும் இடம்பெறாதிருக்க மன்னார் மாவட்ட மக்கள் ஒவ்வொருவரும் இதை உணர்ந்து செயல்படவேண்டும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டீமெல் இவ்வாறு தெரிவித்தார்.

தற்பொழுது நாட்டில் எற்பட்டிருக்கும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மன்னார் மாவட்ட மக்களை எவ்வாறு பாதகாக்கலாம் என்பதன் தொடர்பாகவும் எவ்வாறு இவ் மாவட்டத்தில் இவ் தொற்றுநோய் பரவாதிருக்க தடுக்கலாம் என்பது தொடர்பாகவும் இது சம்பந்தமான துறைசார்ந்த திணைக்களங்களோடும் நிறுவனங்களோடும் மற்றும் பாதுகாப்பு படையினருடனும் பொலிசாரோடும் கலந்துரையாடல் ஒன்று மன்னார் மாவட்ட செயலகத்தில் செவ்வாய்கிழமை மாலை அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டீமெல் தலைமையில் இடம்பெற்றது.

இதன் அடிப்படையில் மன்னார் மாவட்டத்தில் இக்காலக்கட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளது. இவ் காலக்கட்டத்தில் எதிர்வரும் நாட்களில் எவ்வாறான நடைமுறைகளை கையாள வேண்டும் தொடர்பாகவும் குறிப்பாக மாகாணங்களுக்கிடையான பயணத்தடைகள் விதிக்கப்பட்டுள்ளமையால் இவ் மாவட்டத்துக்கு அத்தியாவசிய தேவைகள் அடையாளம் காணப்பட்டு வெளி மாவட்டங்களிலிருந்து பொருட்களை கொள்முதல்செய்வதும் இதற்கான பாஸ் நடைமுறை தொடர்பாகவும் உரையாடப்பட்டது.

உண்மையாகவே அத்தியாவசிய சேவைகளை செய்கின்றவர்களை இனம் காணப்பட்டு அவர்களுக்கும் பாஸ் நடைமுறைகளைமேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இதை பயண்படுத்தி வியாபாரத்தில் புதிதாக உருவாகும் நபர்கள் தவிர்ப்பது தொடர்பாகவும் இக் கூட்டத்தில் தெளிவூட்டப்பட்டுள்ளது. அத்துடன் மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்றுநோய் பரவாதிருக்க ஒவ்வொருவரும் உணர்ந்து தனதும் தனது குடும்பத்தினதும் அத்துடன் சமூகத்தினதும் நலன்கருதி அயல் நாடானா இந்தியாவில் தற்பொழுது நடைபெறும் நிகழ்வுகளை கருத்தில் கொண்டு எமது மாவட்டத்திலும் இவ்வாறான பிரச்சனை ஏற்படாதிருக்க ஒவ்வொருவரும் பொறுப்புடன் செயல்பட வேண்டும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டீமெல் இவ் கலந்துரையாடல் முடிவில் ஊடகங்களுக்கு இவ்வாறு தெரிவித்தார்.

# கணவனை இழந்த குடும்பத் தலைவிகளுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைப்பு




(எச்.எம்.எம்.பர்ஸான்)

புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு கணவனை இழந்த குடும்பத் தலைவிகளுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

அகில இலங்கைவை. எம்.எம்.ஏ.பேரவை மற்றும் அல்மா அமைப்பு ஆகியவை இணைந்து இத் திட்டத்தை மேற்கொண்டுள்ளது.

அந்தவகையில், மட்டக்களப்பு மாவட்டத்துக்கான உலர் உணவுப் பொதிகளை வழங்கும் பிரதான நிகழ்வு கல்குடா தொகுதி வை.எம்.எம்.ஏ.பேரவையின் தலைவர் ஏ.எல்.பசீர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர் எம்.ஐ.ஜகாப்தீன், நில அளவை உதவி உத்தியோகத்தர் எம்.ஏ.இஸ்மாயில், போசகர் மௌலவி எம்.ஐயூப், செயலாளர் எம்.எல். அபூ லயீஸ் ஆகியோர் கலந்து கொண்டு உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

# ஒவ்வொருவரும் அவதானமாக இருக்க வேண்டும் மன்னார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வேண்டுகோள்

(வாஸ் கூஞ்ஞ)



கொரோனாதாக்கம் எமது நாட்டில் பல இடங்களில் தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றபோதும் மன்னார் மாவட்டம் அந்த அளவு தாக்கத்துக்கு உள்ளாகாது இருப்பதால் நாம் இக் காலக்கட்டத்தில் மிக அவதானமாக இருக்க வேண்டும் என மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் இவ்வாறு தெரிவித்தார்.

தற்பொழுது நாட்டில் எற்பட்டிருக்கும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மன்னார் மாவட்ட மக்களை எவ்வாறு பாதகாக்கலாம் என்பதன் தொடர்பாகவும் எவ்வாறு இவ் மாவட்டத்தில் இவ் தொற்றுநோய் பரவாதிருக்க தடுக்கலாம் என்பது தொடர்பாகவும் இது சம்பந்தமான துறைசார்ந்த திணைக்களங்களோடும் நிறுவனங்களோடும் மற்றும் பாதுகாப்பு படையினருடனும் பொலிசாரோடும் கலந்துரையாடல் ஒன்று மன்னார் மாவட்ட செயலகத்தில் செவ்வாய்க்கிழமை மாலை அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டீமெல் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் தெரிவிக்கையில்

அணைவருக்கும் தற்பொழுது நாட்டிலுள்ள கொரோனா தொற்றுநோய் சம்பந்தமாக நன்கு தெரியும். நாட்டில் சராசரியாக இரண்டாயிரம் கொரோனா தொற்று நோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றார்கள்.

ஒரு நாளைக்கு சராசரியாக நாட்டில் 12 ஆயிரத்திலிருந்து 15 ஆயிரம் பேருக்கு பிசீஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளும்போதுதான் இவ் தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றார்கள்.

ஆகவே ஒருநாளைக்கு இரண்டாயிரம் பேர் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றார்கள் என்றால் தொற்றாளர்களின் அதிகரிப்பு நமக்கு புரிகின்றது.

புதுவருடத்துக்கு முன் எமது வைத்தியசாலையில் நோயாளிகள் அனுமதிக்கப்பட்டால் இரண்டு பேருக்கு மட்டுமே ஒட்சிசன் தேவைப்பட்டன.

ஆனால் தற்பொழுது நாட்டில் நூற்றுக்கு 14.5 வீதமானோருக்கு குறைந்தது 48 மணித்தியாலயங்களுக்கு ஒட்சிசன் தேவைப்பாடு அதிகரித்துள்ளது. ஆகவே இதை சமாளிக்க வேண்டும் என்றால்; கண்டுபிடிப்பாளர்களை ஒரே நேரத்தில் கண்டுபிடிப்பதை தவிர்த்துக்கொள்ள வேண்டிய நிலையும் காணப்படுகின்றது.

தற்பொழுது மாகாணங்களுக்கிடையே போக்குவரத்துக்கள் தடைசெய்யப்பட்ட நிலை காணப்படுகின்றது. சில சமயம் இந்த வாரத்துக்குள் மாவட்டங்களுக்கிடையேயும் இவ்வாறான போக்குவரத்துக்கள் தடைப்படலாம்.

மன்னார் மாவட்டத்ததை பொறுத்தமட்டில் ஏப்பிரல் மாதத்தில் 27 நபர்கள் மட்டும் இவ் தொற்றாறாளர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த வருடத்தில் எமது மாவட்டத்தில் இது ஆகக் குறைவான தொகை. தற்பொழுது 460 நபர்களின் பிசீஆர் பரிசோதனை முடிவுகள் எமக்கு கிடைக்க வேண்டியுள்ளது. இதில் நாங்கள் 40 தொடக்கம் 50 வீதமானவர்களை எதிர்பார்க்கின்றோம்.

2020 ஆம் ஆண்டு ஜனவரி பெப்பிரவரியில் யுகே, இத்தாலி ஆகிய நாடுகளில் கொரோனா எந்த சந்தர்ப்பத்தையும் கொடுக்காது பெரும் பாதிப்பை ஏற்படுத்திருப்பதை நாம் அறிவோம்.

இப்பொழுது ஒரு வருடம் பூர்த்தியடைந்த நிலையில் இப்பொழுது வேறொரு விதத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இப்பொழுது எமது நாட்டில் தென் பகுதியில் இது பெரும் தாக்கத்தை உண்டு பண்ணி வருகின்றது. ஆகவே தற்பொழுது எமக்கு எமது மாவட்டத்தில் கிடைக்கப்பெற்றிருக்கும் இந்த இடைவெளியில் நாம் பயனுள்ளதாக பாவித்து நாம் பாதுகாப்பை தேடிக்கொள்வதில் அக்கறை செலுத்தவேண்டும்.

கடந்த வருடம் கொரோனா ஏற்படத் தொடங்கியதும் எமது மாவட்டத்துக்கு நேரடியாக ஒட்சிசனை பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

தற்பொழுது நாங்கள் ஒட்சிசனை அனுராதபுரத்திலிருந்துதான் எடுத்து வருகின்றோம். ஒரு நாளைக்கு நாங்கள் 48 சிலிண்டர்களில் ஒட்சிசனை நிரப்பக்கூடியதாக இருக்கின்றது என்றார்.







# தனிமைப்படுத்தப்பட்டுள்ள அட்டன் போடைஸ் தோட்ட மக்கள் ஆர்ப்பாட்டம்



(க.கிஷாந்தன்)

தனிமைப்படுத்தப்பட்டுள்ள அட்டன் போடைஸ் தோட்ட மக்கள் தமக்கான நிவாரணம் வழங்கப்படுவதில்லை என குற்றம் சுமத்துகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என கோரி நேற்று புதன்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

அட்டன் - டயகம பிரதான வீதியில் அமைந்துள்ள தோட்ட தொழிற்சாலைக்கு முன்பாக இந்த போராட்டம் நடைபெற்றது.

அந்த தோட்டத்தில் கொவிட் தொறாளர்கள் சிலர் அடையாளம் காணப்பட்டதை தொடர்ந்து என்பீல்ட் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட போடைஸ் தோட்டத்திற்கு பயண தடை விதிக்கப்பட்டது.



இவ்வாறான நிலையில் நேற்று காலை பயணத் தடை நீக்கப்பட்டதை தொடர்ந்து போடைஸ் தோட்ட மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

எனவே கடந்த பல நாட்களாக தனிமைப்படுத்தப்பட்டிருந்த தாம் தோட்ட தொழிலையும் இழந்து வருமானமில்லாது அவதிப்படுவதாக ஆர்ப்பாட்டகாரர்கள் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறாயினும் மேற்படி பிரச்சினைகளுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துபேசி தீர்வை பெற்று தருவதாக அட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

எனவே நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி ஒன்று கூட முடியாது எனவும் பொலிஸார் ஆர்ப்பாட்டகாரர்களுக்கு அறிவித்துள்ளனர். இதனை தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தை கைவிட்டனர்.

இதேவேளை இன்ஜஸ்ரி கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட ஹொன்சி நகரம் புளியாவத்த, பேன்போட் ஆகிய தோட்ட பிரிவுகளும் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

எனினும் இன்ஜஸ்ரி, பிலிங்போனி ஆகிய தோட்டங்கள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக பொகவந்தலாவ சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

# ஆற்றில் ஆணின் சடலம் மீட்பு



(க.கிஷாந்தன்)

எட்டியாந்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மகாவலி ஆறுக்கு நீர் வழங்கும் கந்தலோயா ஆற்றில் ஆணின் சடலம் ஒன்று மீட்கப்பட்டதாக எட்டியாந்தோட்டை பொலிஸார் தெரிவத்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் எட்டியாந்தோட்டை கந்தலோயா தோட்ட கீழ் பிரிவைச் சேர்ந்த 39 வயதுடைய சுப்பிரமணியம் நடராஜ் என்ற இரண்டு பெண் குழந்தைகளின் தந்தை என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் கடந்த 10ம் திகதி முதல் காணாமல் போய்விட்டதாக பொலிஸ் நிலையத்தில் அவரது உறவினர்களால் முறைப்பாடு பதிவு செய்துள்ள நிலையிலேயே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

எனினும், குறித்த ஆணின் மரணம் தொடர்பாக பலகோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

ருவான்வெல்ல நீதிமன்ற நீதிவானின் மரண விசாரணைகளின் பின் சடலம் வைத்திய பரிசோதனைக்காக நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை எட்டியாந்தோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மே 18 இல் வீட்டிலிருந்தவாறு விளக்கேற்றி அஞ்சலி செலுத்துங்கள்

## காரைதீவு தவிசாளர் ஜெயசிறில் வேண்டுகோள்

( வி.ரி.சகாதேவராஜா)



மே 18ஆம் திகதி பிற்பகல் 6 மணி 18நிமிடம் 18 வினாடியில் அரசின் சட்டதிட்டங்களை மதித்து சுகாதார வழிமுறைகளை பின்பற்றி வீட்டிலிருந்தவாறு விளக்கேற்றி ஆத்ம சாந்திக்காய் அஞ்சலி செலுத்துமாறு தயவாய் வேண்டுகிறேன்.

இவ்வாறு காரைதீவு பிரதேசசபையின் 39ஆவது மாதாந்த அமர்வு நேற்று புதன்கிழமை நடைபெற்றபோது சபையின் தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் வேண்டுகோள்விடுத்தார்.

குறித்த அமர்வு நேற்று சபாமண்டபத்தில் நடைபெற்றபோது அவர் மேலும் பேசுகையில்:

சமகால கொரோனா அசாதாரணநிலைமை காரணமாக எமது சுகாதாரவைத்தியஅதிகாரியின் வேண்டுகோளுக்கமைவாக இன்றுமுதல் வெளியூர் அங்காடி வியாபாரிகளுக்கு தடைவிதிக்கிறது இச்சபை.

வருமானம் குறைந்த சபையாக எமது சபை இருந்தபோதிலும் எமது முயற்சியினால் 20லட்சருபா இருப்போடு இருப்பது மகிழ்ச்சி தருகிறது. எனினும் எமக்கு கல்முனை மாநகரசபையிடமிருந்து பலலட்சருபா தருமதி இருக்கிறது. இன்றோநாளையோ கிடைக்கக்கூடும் என மேயர் கூறியிருக்கிறார். அது வந்தால் உறுப்பினர்களின் கோரிக்கைகளை பரிசீலனை செய்யலாம் என்றார்.

அகிலஇலங்கை மக்கள் காங்கிரஸ் மாவடிப்பள்ளி உறுப்பினர் எம்.எஸ்.ஜலீல் கண்டனப்பிரேரணைகொண்டுவந்துரையாற்றுகையில்:

எமது தலைவர் றிசாட்பதியுதீன் சட்டத்திற்கும் ஜனநாயகத்திற்கும் முரணானவகையில் நடுநிசியில் சபாநாயகரின் அனுமதியின்றி புனிதரமழான் காலத்தில் கைது செய்யப்பட்டமையை வன்மையாகக்கண்டிக்கிறேன். அரக்கத்தனமான இந்த அரசாங்கம் தனது வீழ்ச்சியை சரிக்கட்டமுகமாக தனிப்பட்டதேவைகளுக்காக அவரைக்கைதுசெய்து எவ்வித விசாரணையுமின்றி தடுத்துவைத்துள்ளது.

மேலும் அஷாத்சாலி அஜ்துல் அக்தர் மற்றும் 2500 காத்தான்குடி முஸ்லிம் இளைஞர்களையும் வெறுமனே கைது செய்து விசாரணையின்றி தடுத்துவைத்துள்ளனர். உடனடியாக சட்டப்படி அவர்கள் விடுதலைசெய்யப்படவேண்டும் என்றார்.

பிரேரணைக்கு ஆதரவாக மாளிகைக்காடு சுயேச்சை உறுப்பினர் எ.ஆர்.எம்.பஸ்மீர் உரையாற்றுகையில்: முஸ்லிம் தலைவர்களை இவ்வாறு சட்டத்திற்குமுரணாக கைதுசெய்யும் இச் சர்வாதிகார அரசாங்கம் இதற்கவகைகூறவேண்டும். இன்று அவர்கள் நாளை இன்னும் பல தலைவர்கள் கைதாகலாம்.எனவே இச்சபையில் கண்டனப்பிரேரணையை அனைவரும் இணைந்து நிறைவேற்ற வேண்டும் என்றார்.

தவிசாளர் கி.ஜெயசிறில் பிரேரணை தொடர்பாகப் பேசுகையில்:

உண்மையில் இது கண்டிக்கப்படவேண்டியது. நாம் ஏகோபித்தமுறையில் ஆதரவுதருகிறோம். இதுபோல கடந்தகாலங்களில் தமிழ்த்தலைவர்கள் தமிழ் இளைஞர்கள் வகைதொகையின்றி எவ்வித விசாரணையுமின்றி பல்லாண்டுகாலமாக தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இதே போல முள்ளிவாய்க்கால் சம்பவம் போன்ற சம்பவங்களுக்கெல்லாம் பெரும்பாலான முஸ்லிம் தலைவர்கள் வாய்மூடி மௌனியாக இருந்துள்ளனர்.

ஆனால் தமிழ்த்தலைவர்கள் அன்றும் சரி இன்றும் சரி. சகோதர முஸ்லிம் சமுகம் பாதிக்கப்படும்போது தொடர்ச்சியாக குரல் கொடுத்து வந்துள்ளதை யாரும் மறக்கவோ மறுக்கவோ முடியாது. எனவே இனிமேலாவது தமிழர்கள் நசுக்கப்படும்போது முஸ்லிம் தலைவர்கள் வெறுமனே கைகட்டி மௌனியாக பார்த்துக்கொண்டிருக்காது குரல்கொடுக்க முன்வரவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

# ஹரீஷ் போன்றவர்கள் இருக்கும் வரை தமிழ்பேசும் மக்கள் மத்தியில் நல்லுறவு ஏற்படாது

(துறையூர் சஞ்சயன்)

கல்முனை பிரதேசங்களில் தமிழர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அநீதிகள், அநாதைகளாக வாழ வேண்டிய சூழலுக்கு தமிழ் மக்களைஇட்டுச்சென்றுள்ளது. அநீதிகள் தொடராக இருக்க வேண்டும் என்பதுதான் முஸ்லிம் சகோதரர்களின் அவாவாக இருக்கின்றது என, தமிழ் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்தார்.

நாவிதன்வெளி 15ஆம் கிராமத்திலுள்ள அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

பொதுமக்களின் தேவை நோக்கம் கருதி புதிய புதிய பிரதேச செயலகங்கள் உருவாக்கப்படும் நிலையில் நாட்டிலுள்ள 350க்கு மேற்பட்ட பிரதேச செயலகங்களுள் கல்முனை வடக்கு பிரதேச செயலகமும் ஒன்றாக விளங்குகிறது.

இலங்கையில், அம்பாறை மாவட்ட தமிழ்மக்கள் நீண்ட காலமாக பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகிறார்கள். அந்த அடிப்படையில் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக குறித்த சமூகங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியலாளர்களால் உருவாக்கப்பட்டு கிட்டத்தட்ட 33 வருடங்களாக கல்முனை செயலகம் இயங்குகிறது.

கல்முனை பிரதேச செயலகம் உருவாக்கப்படுகிற போது பலர் பல விதமான கருத்துக்களை கூறிக்கொள்கிறார்கள். கடந்த காலங்களில் இன ரீதியான பிரச்சினை இருந்தபோது அதிகமான தமிழர்கள் புலிகள் என்ற முத்திரை குத்தப்பட்டு இல்லாமலாக்கப்பட்ட வரலாறுகள் அதிகம் உண்டு. இப்பொழுதும் அவ்வாறான முத்திரைகளை சில அரசியலாளர்கள் குத்த முயல்வது வேடிக்கையான விடயம்.

கருமங்களை இலகுவாக மேற்கொள்வதன் பொருட்டு கல்முனை வடக்கு பிரதேச செயலகம் 1987 ஆம் ஆண்டு 04 மாதம் 12 ஆம் திகதி கல்முனைத் தமிழர் மகா சங்கத்தினாலும் அன்றைய பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சராக இருந்த தேவநாயகத்தினாலும் உதவி அரசாங்க காரியாலயமாக இயங்க ஆரம்பித்துள்ளது. இந்த வரலாறு தெரியாதவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அன்றிலிருந்து இன்றுவரை முழுமையான பிரதேச செயலகமாக இயங்குகிறது. சீராக இயங்குகின்ற செயலகத்திற்கு அரசியலாளர்கள் மாத்திரமல்ல முஸ்லிம் அமைப்புகளும் பல விதமான கருத்துக்களை முன்வைத்து வருவதென்பது, சிறுபான்மைச் சமூகங்களுக்கு மத்தியில் ஒரு முறுகல் நிலையினை ஏற்படுத்தி கல்முனை பிரதேச செயலகத்திலே கையாளப்படுகின்ற விடயங்கள் தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்குள் பிளவுகளை ஏற்படுத்தக்கூடிய வகையிலேயே அரசியல்வாதிகளும் மத அமைப்புகளும் கருத்துக்களைக் கூறுவது மிகவும் ஒரு மோசமான சூழலை உருவாக்குவதற்கு வழிவகுக்கும்.

குறிப்பாக அம்பாறை மாவட்டத்திலே 20 பிரதேச செயலகங்கள் இயங்குகின்றன. இந்த பிரதேச செயலகங்களிலே அதிகமானவை இரு இனங்கள் இணைந்து வாழ்கின்ற பிரதேச செயலகங்களாகவே அதிக செயலகங்கள் இயங்குகின்றன. அவ்வாறு இருக்கின்றபோது கல்முனை பிரதேச செயலகம் பிரிக்கப்படுகிறபோது முஸ்லிம் சமூக சகோதரர்களுக்கு என்ன பிரச்சினை ?

33 வருடங்களாக இயங்கும்போது இற்றைவரைக்குமாக எந்தப் பிரச்சினைகளும் ஏற்படவில்லையே.

இந்த நாட்டில் சிறுபான்மைச் சமூகத்திற்கு ஏற்படுத்தப்படுகிற அநீதிகளை ஓரம் தள்ளிவிட்டு கல்முனை செயலகத்தில் மாத்திரம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ், ஏன் அக்கறை காட்டுகிறார்.

குறிப்பாக 1977, 1989 காலகட்டத்தில் தமிழர்களுடைய பிரதேசங்களிலே திட்டமிட்டு குடியேற்றங்களைச் செய்து கல்முனை செயலக அதிகாரங்களை இல்லாமல் செய்து தங்களுடைய அதிகாரங்களை திணிப்பதற்காக ஹரீஷைப் போன்ற அரசியல்வாதிகள் துடித்துக்கொண்டிருக்கிறார்கள். ஹரீஷ் போன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கும் வரைக்கும் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் நல்லுறவை ஏற்படுத்த முடியாது.

ஜனாசா எரிப்பு உட்பட பல்வேறு அடக்குமுறைகள் முஷ்லிம்களுக்கெதிராக ஏற்பட்டபோது அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது செயலகத்தை மாத்திரம் தரம் உயர்த்தக்கூடாது என்பதை பேரம் பேசுகின்ற விடயமாக வைத்துக் கொண்டு இப்பொழுது செயற்படுவது தான் மன வேதனை.

பலஸ்தீன மக்களுக்கு ஏற்பட்ட அநீதிகளைச் சுட்டிக்காட்டி இலங்கையில் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்திருந்தார்கள். கடந்த காலங்களில் முஸ்லிம் சமூகங்களுக்காக நாங்களும் குரல் கொடுத்துள்ளோம். ஜனாஷா எரிக்கப்படுகின்ற போது தமிழ்த்தேசிய அரசியலாளர்கள் மிகவும் ஆக்ரோஷமாக பாராளுமன்றத்தில் குரல் கொடுத்திருந்தனர். இலங்கையில் மாத்திரமல்ல வெளிநாடுகளிலும் முஸ்லிம்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அநீதிகளுக்கெதிராக குரல் கொடுத்துள்ளோம் என்பதை மறந்துவிட முடியாது.



மக்கள் முழுமையான அபிவிருத்தியினை பெற வேண்டும் என்ற அடப்படையில் பல்வேறு வேலைத்திட்டங்களை கடந்த காலத்தில் செய்துள்ளீர்கள். ஆனால் அவை பற்றி நாங்கள் கேட்கவில்லையே.

குறிப்பாக குறைந்தளவு எண்ணிக்கையான மக்கள் வாழ்கின்ற இறக்காமம் பிரதேசத்திற்கு செயலகமும் சபையும் உருவாக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. அதே போன்று 5000 வாக்காளர்களைக் கொண்ட அக்கறைப்பற்றில் மாநகர சபையும் பிரதேசசபையும் உருவாக்கப்பட்டிருக்கிறது.

Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
Tel : 044 2410241
Fax : 044 2410245
sikaramgmbh@gmail.com / www.sikaram.com

# கொரோனா கட்டுப்பாடுகளை மீறி பல வர்த்தக நிலையங்கள் கல்முனை பிராந்தியத்தில் திறப்பு!

## – மக்கள் விசனம்



(பாறுக் ஷிஹான்)

கொரோனா 3 அலையின் வீரியம் அதிகரித்துள்ள நிலையில் கல்முனை பிராந்திய சுகாதார பணிமனையினால் வெளியிடப்பட்ட கட்டுப்பாடுகளை பல வர்த்தக நிலையங்கள் மீறி வருகின்றன.

கடந்த திங்கட்கிழமை (10) கல்முனை பிராந்தியத்தில் கொரோனா 3 ஆவது அலையை கட்டுப்படுத்துவது தொடர்பில் ஆராயும் கூட்டம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் பணிப்பாளர் ஜி. சுகுணனின் தலைமையில் நடைபெற்ற வேளை கொரோனா கட்டுப்பாட்டு நிலைகள் தொடர்பிலும் சுகாதார விதிமுறைகளை மீறி சாய்ந்தமருதில் நடைபெற்ற நிகழ்வொன்று தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளதுடன் கல்முனை பிராந்தியத்தில் எதிர்வரும் மூன்று நாட்களுக்கு இரவு 7 மணி முதல் வர்த்தக நிலையங்கள் மூடப்பட வேண்டும் எனும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இதற்கமைய குறித்த தகவல் ஊடகங்களில் வெளியாகியதை அடுத்து கல்முனை பிராந்தியத்தில் அநேகமான வர்த்தக நிலையங்கள் இரவு 7 மணிக்கு முன்னர் இழுத்து மூடப்பட்டிருந்ததுடன் வர்த்தகர்களும் ஒத்துழைப்புகளை வழங்கி இருந்தனர்.

மற்றும் பொலிஸாரும் இராணுவத்தினரும் பொதுச்சுகாதார பரிசோதகர்களும் மூடப்பட்டிருக்காத வர்த்தக உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை செய்து வர்த்தக நிலையங்களை மூடினர்.

இருந்த போதிலும் சில ஹோட்டல்கள் ஆடையகங்கள் குறித்த நேரத்திற்கு மூடப்படாமல் பின்னிரவு வரை கல்முனை, நிந்தவூர் , சம்மாந்துறை, மருதமுனை பகுதிகளில் திறந்து வியாபார நடவடிக்கையினை தொடர்ந்து வந்திருந்தன.

இதனை தொடர்ந்து மக்கள் மத்தியில் விசனம் தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் உரிய நேரத்திற்கு மூட தவறிய வர்த்தக உரிமையாளர்களுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோளும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதே வேளை கிழக்கு மாகாணத்தில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக மாலை 6 மணிக்கு பின்னர் கடைகளை மூட கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் உத்தரவிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# தனிமைப்படுத்தப்பட்ட பிரதேச வருமானம் குறைந்த குடும்பங்களுக்கான உலர் உணவு பொதிகள்



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை மாவட்டத்தில் கொவிட் பரவல் காரணமாக தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் உள்ள வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு வழங்குவதற்காக ஒரு தொகை உலர் உணவுப்பொருட்கள் வன்னி ஹோப் அவுஸ்த்திரேலியா நிறுவனத்தின் நிதியுதவியில் திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தினால் மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராளவிடம் மாவட்ட செயலகத்தில் (11) வழங்கி வைக்கப்பட்டது.

3000 ரூபா பெறுமதியான 100 உலர்உணவுப்பொதிகள் இதன்போது வழங்கப்பட்டதுடன் உரிய பொருட்கள் உடன் உரிய பிரதேச செயலகங்கள் மூலம் மக்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக அரசாங்க அதிபர் இதன்போது தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ்,உதவி மாவட்ட செயலாளர் (பதில் கடமை) ஜெயகௌரி சிறீபதி, உரிய நிறுவன அதிகாரிகள், மாவட்ட செயலக அரச சார்பற்ற நிறுவன ஒருங்கிணைப்பதிகாரி க.நிர்மலகாந்தன், மாவட்ட செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் திருமதி.சுகந்தினி உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# மருதமுனைச் சேர்ந்த மல்யுத்த பயில்வான் காலமானார்

(பி.எம்.எம்.ஏ.காதர்)



மருதமுனையின் விளையாட்டுப் பரப்பில் மற்றுமொரு ஆளுமை மல்யுத்த வீரர் சேகு இஸ்மாயில் முகம்மது முஸ்தபா பயில்வான் இரண்டு வாரங்கள் சுகவீடமுற்றிருந்த நிலையில் (வயது 84) நேற்று (12) காலமானார்.

இவரது ஜனாஸா நல்லடக்கம் நேற்றுக் காலை பத்து மணிக்கு மருதமுனை அக்பர் மையவாடியில் இடம் பெற்றது.

இவர் 1937ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20ஆம் திகதி சேகு இஸ்மாயில்.உம்மு குல்தும் தம்பதிக்கு மருதமுனையில் பிறந்தவர்.எல்லோருடனும் மிகவும் அன்பாகவும்,பண்பாகவும் பழகும் மனம் கொண்டவர். எப்போதும் சிரித்த முகத்துடன் காணப்படுவார். சமூகசேவையும், ஊர்ப்பற்றும் இவரிடம் அதிகம் காணப்பட்டது.

இவர் மருதமுனை முஸ்லிம் அரசினர் பாடசாலையின் பழயை மாணவர் (தற்போதய அல்மனார் மத்திய கல்லூரி) அப்போதய கிராமாட்சி மன்றத்தில் மைதானக் காப்பாளராக் கடமையாற்றி ஓய்வு நிலையில் இருந்தார்.

இவரது இளமைக் காலத்தில் விளையாட்டத் துறையில் மிகவும் ஆர்வம் கொண்டவராகவும் இருந்துள்ளார்.

இவர் பல மல்யுத்த வீரர்களை பயிற்றுவித்து பல குழுக்களை உருவாக்கியவர் என்பது குறிப்பிட்தக்கது.

# அம்மன் திருக்குளிர்த்திச் சடங்கில் பக்தர்களுக்கு தடை!

## 10பேர் மாத்திரமே அனுமதி என்கிறார் உதவி பிரதேசசெயலாளர் பார்த்தீபன்!!



(வி.ரி.சகாதேவராஜா)

அண்மைக்காலமாக கொரோனா தீநுண்மியின் தாக்கம் படுவேகமாக அதிகரித்துவருவதனால் வரலாற்றுப்பிரசித்திபெற்ற காரைதீவு கண்ணகை அம்மனாலய வருடாந்த திருக்குளிர்த்தி சடங்கின்போது பக்தர்களுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. ஆக ஆலயநிருவாகிகள் பத்துப்பேருக்கு மட்டுமே வழமைபோல பாரம்பரிய சடங்கு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு காரைதீவு உதவி பிரதேசசெயலாளர் எஸ். பார்த்தீபன் காரைதீவு பிரதேச சுகாதாரவைத்தியஅதிகாரி பணிமனையில் இடம்பெற்ற மக்கள்பிரதிநிதிகளது கூட்டத்தில் தெரிவித்தார்.

வரலாற்றுப்பிரசித்திபெற்ற காரைதீவு கண்ணகை அம்மனாலய வருடாந்த திருக்குளிர்த்தி சடங்கு எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை திருக்கதவுதிறந்து கல்யாணக்கால் நடும் வைபவத்துடன் ஆரம்பமாகி 25ஆம் திகதி செவ்வாய் அதிகாலை திருக்குளிர்த்தி பாடலுடன் நிறைவடையவிருக்கிறது.

அங்கு அவர் மேலும் கூறுகையில்:

பாரம்பரிய சடங்கு என்பதால் அதை கிரமமாக அனைத்து சம்பிரதாயங்களையும் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் பதிவுசெய்யப்பட்ட ஆலயநிருவாகிகள் பத்துப்பேர் மாத்திரம் சடங்குகாலத்தில் ஆலயத்தில் பூரணமாகத் தங்கியிருந்து அதனைச்செய்யவேண்டும் என எமது கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

கடைகளுக்கும் ஏனைய வெளிவிடயங்களுக்கும் தடைசெய்யப்பட்டுள்ளது. நேர்த்திகள் செய்வதும் தடைசெய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் அன்போடு ஒத்துழைக்கவேண்டும் - என்றார்.

# குடிபோதையில் இனமுரண்பாட்டை தோற்றுவிப்போர் மீது சட்டநடவடிக்கை:

## தவிசாளர் ஜெயஸ்ரீரில் அறிவித்தார்!

(நூருல் ஹுதா உமர்)

காரைதீவு என்பது 65 வீதம் தமிழர்களும், 35 வீதம் முஸ்லிங்களும் வாழும் பிரதேசம். இந்த பிரதேசத்தில் மதுபான சாலையொன்று அமைந்துள்ளது. அதனூடாக பல கலாச்சார சீர்கேடுகள், பல்வேறுபட்ட விபத்துக்கள், பல்வேறுபட்ட இன முறுகல்கள் வர வாய்ப்புள்ளது என்ற அடிப்படையில் கோயில் தர்மகத்தாக்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், தேவாலய பாதிரியார்கள் என நாங்கள் எல்லோரும் ஒருமித்து பல்வேறு முன்னெடுப்புக்களை செய்து கொண்டிருக்கிறோம். அந்த மதுபான சாலைக்கு அருகில் அமைந்துள்ள காணிகளில் குடிவெறியில் பல அநாகரியமான சம்பவங்கள் நடைபெறுவதாக அறிகிறோம் என காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கி. ஜெயஸ்ரீரில் தெரிவித்தார். நேற்று (12) காரைதீவு பிரதேச சபையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

அரசாங்கம் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்காமல் இருப்பது அனைத்து தரப்பினரையும் கவலையில் ஆழ்த்தியுள்ளது. பிரதேச செயலகம், பிரதேச சபை, பொலிஸ், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் ஆகிய அனைவரும் இணைந்து போதைப்பொருளை கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். இது தொடர்பில் சம்மாந்துறை பொலிஸாருக்கும் நாணங்கள் எழுத்துமூலம் அறிவித்து அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கைகளை பொலிஸார் எடுத்து வருகிறார்கள்.

தற்போது எமது நாட்டில் பரவலாக நிலவிவரும் கொரோனா அச்சம் காரணமாக எமது பிரதேசத்தின் எல்லைப்பகுதிக்குள் நடமாடும் வெளியூர் அங்காடி வியாபாரிகள் , வெளியூர் மீன் வியாபாரிகள் , பிளாஸ்ரிக், இரும்பு பொருட்கள் கொள்வனவு செய்யும் வியாபாரிகள் அனைவரும் தற்போதைய காலப்பகுதிகளில் எமது பிரதேச எல்லைக்குள் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. என்பதுடன் கொரோனா அச்ச நிலையினை கருத்திற்கொண்டு மறு அறிவித்தல் வரை இந்நடைமுறை அமுலில் இருக்கும் என்பதனையும் அறிவிக்கிறேன்.